1977 ஆகஸ்ட் 8]

அடுத்து, ஒரு கட்சியிலுள்ள சிலர் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்கும்போது, மாற்று கட்சியினர் அதை மாற்ற வேண்டும் என்று எண்ணினால், அதே தெருவிலுள்ள யாராவது ஒருவர் இவர்கள் எல்லாம் இந்தத் தெருவில் இல்லை என்று எழுதிக் கொடுத்துவிட்டால் அவர்களுடைய பெயர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கிவிடுகிறார்கள். 1 முதல் 75 வரை, அல்லது 815 லிருந்து 885 வரை வாக்காளர்கள் இல்லை என்று எழுதி விட்டால், அப்படியே குழு குழுவாக பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு விடுகின்ற நிலை ஏற்படுகின்றது. அத்துடன் இவர்கள் வாக்களிக்க முடியாது என்றும் கூறப்படுகின்ற முறை ஏற்படுகிறது, ஆகவே அப்படி நீக்குவது என்றால், அதற்கு அந்த அதிகாரியே பொறுப்பு எடுத்துக்கொண்டு தனித்தனியாக விசாரித்து நீக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அவ்விதம் குறைகள் ஏற்படாதவாறு அரசாங்கம் பார்த்துக்கொள்ளும்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : ஊராட்சி மன்றத்திற்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் தனித்தனியாக வாக்காளர் பட்டியல் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

திரு. எம். ஏ. ஜெயவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு வைத்திருக்கின்ற முதலமைச்சர்களின் பெயர் பட்டியலில், முதலில் இருந்த முதலமைச்சரின் பெயருக்கு நேராக 1969-லிருந்து என்று போட்டு எப்போது எந்த வருடம் முடிந்தது என்று போடாமல் விட்டு, புரட்சித் தலைவருடைய பதவி காலத்தையும் போட்டிருக்கிறார்கள், என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதைச் சரியாக போடாவிட்டால் தவறான கருத்தை ஏற்படுத்தும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

*31 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுப் பேருந்துகளில் 1976 ஜனவரித் திங்களுக்குப் பின்னால் இருபது அம்சத் திட்டம் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த இருபது அம்சத் திட்ட விளம்பரத்திற்காக 1976-க்குப் பின்னாலே தமிழக அரசு செலவிட்ட தொகை எவ்வளவு? மத்திய அரசு மானியத் தொகை அல்லது உதவித் தொகை ஏதாவது வழங்கி இருக்கிறதா? அதன் அளவு என்ன என்பதை அறிய முடியுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, 7-2-1976 அன்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில் மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் அலுவலகத்திலிருந்து அளிக்கப்பட்ட 8 வாசகங்கள் போக்கு வரத்துக் கழகத்திற்கு அனுப்பப்பட்டன. அவைகள் இலவசமாக விளம்பரப்படுத்தப்பட்டது. அரசாங்கத்தின் பேருந்துகளில் அவைகள் அரசாங்கத் தரப்பில் இலவசமாக வெளியிடப்பட்டன.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, இந்த இருபது அம்ச விளம்பரம் இன்னும் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று இந்த அரசு கருதுகிறதா? அப்படியென்று சொன்னால், அது அவசியமில்லை என்று கருதக்கூடிய சூழ்நிலை இருக்குமானால், அதை நீக்கக்கூடிய அளவிற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியில் ஜனதா கட்சி ஆட்சி அமைந்த பிறகு, 11—4—1977 அன்று மத்திய அரசாங்கம் அனுப்பிய கடிதத்தில், 20 அம்சத் திட்டப் பிரசாரங்களை உடனடியாகக் கைவிடும்படி கேட்டுக் கொண்டது. ஆனால், 29—4—1977 மத்திய செய்தி ஒலிபரப்பு இலாகா அனுப்பிய கடிதத்தில், 16 வாசகங்களைத் தொடர்ந்து விளம்பரப்படுத்தும்படி கேட்டுக் கொண்டது. அதன்படி அந்த வாசகங்கள் விளம்பரப்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 20 அம்சத் திட்டம் சமுதாயத்திலே முற்போக்கான வளர்ச்சியை உண்டாக்குவதற்காக என்று சொல்லப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டது. அப்படிப் பல்வேறு வாசகங்கள் விளம்பரப்படுத்தப்பட்டது. மக்களுக்கு விளங்காததாகவும், பயன் அளிக்காததாகவும், நடைமுறையில் செயல்படுத்த முடியாததாகவும் இருக்கிறது என்பதை இப்போ தாவது அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும். இன்றைக்குக் கூட, போக்குவரத்து பஸ்களில் வாசகங்கள் வெளியிட்டுள்ளதில்,

1977 ஆகஸ்ட் 8]

பல்லவன் போக்குவரத்துக் கழக பஸ்ஸில் எழுதப்பட்டுள்ள தொடரில் ஒன்று 'நல்வாழ்வை நோக்கி நாடு நிற்கிறது' என்று எழுதப்பட்டிருக்கிறது. 'நல்வாழ்வை நோக்கி நாடு முன்னேறுகிறது' என்று எழுதினால் நாடு முன்னேறாவிட்டாலும்—கருத்து பயனுடையதாக இருக்கும். 'நல்வாழ்வை நோக்கி நாடு நிற்கிறது' என்று ஓடுகிற வண்டிகளில் விளம்பரப்படுத்தி இருப்பது, மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்குமா என்பதை இந்த அரசு சிந்தித்துப் பரிசீலனை செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, 29-4-77 அன்று கடிதத்தின்படி இந்த வாசகங்கள் அனைத்தும் மத்திய அரசாங்கத்திலே இருந்து அனுப்பப்பட்ட குறிப்புகள் ஆகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, தேவையான கருத்துக்களை ஏற்க, இந்த அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பேருந்து வண்டிகளில் 20 அம்சத் திட்ட விளம்பரங்கள் எழுதப்பட்ட நேரத்தில், அதை எழுதும் நோக்கத்தோடு பெரியார் போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம், பல்லவன், சேரன், சோழ, பாண்டியன் போக்குவரத்துக் கழகங்கள் போன்றவைகளில், அதற்குரிய சின்னங்கள் அழிக்கப்பட்டு, பேருந்துகளில் எழுதப்பட்டிருக்கின்றன. இப்போது இந்த 20 அம்சத் திட்ட விளம்பரங்கள் அகற்றப்பட்ட பிறகு, மீண்டும் பெரியார், அண்ணா, கட்டபொம்மன், சேர, சோழ, பாண்டியன் ஆகியவைகளில் அதற்கான சின்னங்கள் அந்தந்தப் பேருந்துகளில் எழுத ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறிய யோசனை ஏற்கனவே பரிசீலனையில் இருக்கிறது. பல்லவன் போக்குவரத்துக் கழகம், சேர, சோழ, பாண்டியன் ஆகிய பேருந்துகளில் இந்த 20 அம்சத் திட்ட விளம்பரங்களை மாற்றி அமைக்க நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம். விரைவிலே அவைகள் நடைமுறைக்கு வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல், அரசுப் பேருந்துகளில் எல்லாம் தந்தை பெரியார், அண்ணா, சேர, சோழ, பாண்டியன் போக்கு

வரத்துக்கள் என்பதற்கான சின்னங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது, அந்த அரசு பஸ்களில் முகப்புகளில் ஏ.ஆர்.சி., பி.ஆர்.சி., சி.ஆர்.சி., என்று ஆங்கில நாட்டில் வழங்குவதைப் போல் எழுத்துக்கள் எழுதப்பட்டிருக்கின்றன. எனவே, மீண்டும் அவைகள் எல்லாம் நீக்கப்பட்டு, பெரியார், அண்ணா, சேர, சோழ, பாண்டியன் போன்ற வாசகங்களை எழுதுவதற்கு இந்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.20)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: முந்தைய மத்திய அரசும், இன்றைய மத்திய அரசும் அனுப்பிய உத்தரவின்படி செய்யப்பட்ட ஏற்பாடுகளில் ஏற்பட்ட குறைபாடுகளை எல்லாம் களைந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையின்படி அமல்படுத்த ஏற்கனவே நாங்கள் உத்தரவிட்டுள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: இருபது அம்சத் திட்டங்களில் சில நீக்கப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். 'கள்ளக் கடத்தலை ஒழிப்போம், தடுப்போம். தீவிர நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவோம்' என்று இப்படிப் பல நல்ல வாசகங்கள் உண்டு. அது நீக்கப்பட்டிருந்தால் நீக்கப்பட்டிருக்கட்டும். தற்போது 16 வாசகங்கள் மத்திய அரசியல் இருந்து வந்திருப்பதாகப் போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அவை என்ன புதிய வாசகங்கள் என்பதை அவையில் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இன்றைக்கு மத்திய அரசு அனுப்பியுள்ள புதிய 16 வாசகங்களைப் படிக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். படிக்கிறேன்—

1. Be Indian, buy Indian.
2 Kashmir to Kanyakumari--India is one.
3. Many religions, one Nation; let us be proud of it.
4. India is our country—Let us help make it strong and prosperous.
5. It is nice to be important but it is important to be nice.
6 Delay breeds corruption.
7. Delays cause frustration—Avoid them.
8. Time is good—Do not fritter it away.

1977 ஆகஸ்ட் 8]

9. Railway property is your property; keep it clean.
10. Railway property is your property; protect it.
11. Government Service is service to the people.
12. Best Labour saving device—prompt disposal of matters, not merely of papers.
13. Everyone likes an honest and courteous public servant.
14. There is no substitute for hard work.
15. Courtesy keeps every one happy.
16. If our villages prosper, we prosper.

இந்தப் பதினாறு வாசகங்களை இன்றைய மத்திய அரசு விளம்பரப் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறது. கட்டாயமாக விளம்பரப்படுத்த வேண்டுமென்பதல்ல; இவைகளில் எவை எவற்றை விளம்பரப்படுத்த வேண்டுமென்பதையும் மேலும் தமிழக மக்களுக்கு உகந்தன வேறு எவை விளம்பரப்படுத்த வேண்டுமென்பதையும் பற்றி இந்த அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. மு. கருணாநிதி: இப்போது அமைச்சர் அவர்கள் படித்துக் காட்டிய வாசகங்கள் ஆங்கிலத்தில் இருக்கின்றன. அவைகளை மொழிபெயர்த்து எழுதுகின்ற நேரத்தில் ஏற்கனவே இங்கு பேராசிரியர் குறிப்பிட்டது போல் நல்ல முறையில் மொழி பெயர்த்து வெளியிடுவார்களா என்று நான் கேட்பது வெளியிட வேண்டுமென்ற நோக்கத்தோடு அதைக் கேள்வியாகக் கேட்கிறேன். இவைகளை எழுதுகிற நேரத்தில் ஏற்கனவே திட்டமிட்டு நாம் பேருந்து வண்டிகளில் அமைத்திருந்த சின்னங்கள்—பெரியார், அண்ணா, கட்டபொம்மன் மற்றும் சேர, சோழ, பாண்டியர்களின் பெயர்கள் விளங்குகிற வகையில் அந்தச் சின்னங்கள் மறையாமல் பாதுகாக்கப்படுமா?

மூன்றாவதாக, ஏற்கனவே பேருந்து வண்டிகளில் திருவள்ளுவர் படத்தை வைத்து ஒவ்வொரு திருக்குறள் எழுதப்பட்டிருந்தது. அவைகளும் குடியரசுத் தலைவர் ஆட்சியில் கொஞ்சம் கொஞ்சமாக அகற்றப்பட்டிருக்கின்றன. அவைகளையும் இந்த அரசு கவனிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஆங்கிலத்தில் குறிப்பிடப் பட்டுள்ள 16 வாசகங்களைத் தூய தமிழில் எழுதவேண்டுமெனக் கூறும்போது—அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் மொழியில் எந்த அளவுக்கு அக்கறை கொண்டுள்ளது என்பதைத் தமிழக மக்களின் தீர்ப்பிலிருந்து

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உணருவார்கள் என்று கருதுகிறேன். எவையும் தூய தமிழில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமென்பதில் இந்த அரசும் மாண்புமிகு உறுப் பினர்களும் அவர்களின் எண்ணத்தை ஏற்கனவே செயல் வடிவில் காட்டி வருகிறது.

திரு. மு. கருணாநிதி: நான் ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்புகிறேன். ஆங்கிலத்தில் உள்ளது நல்ல தமிழில் எழுதப்பட வேண்டும் என்று கூறியது ஏற்கனவே அவ்வாறு எழுதப்படவில்லை என்பதால்தான். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் நல்ல தமிழாற்றல் உள்ளவர்கள் இருக்கிறார்கள் என்பதை நன்றாக அறிவேன். அதைக் குறித்து கேள்வி நேரத்தில் அமைச்சர் அவர்கள் பேசுவது—அதனால்தான் மக்கள் தேர்ந்தெடுத் தார்கள் என்று சொல்லுவது கேள்வி நேரத்திற்குப் பொருத்த மற்றது. அவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பளிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தமிழ் மொழி நலன் காக்கும் அரசாக இந்த அரசு இருக்கும் காரணத்தால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் தூய தமிழில் நல்ல தமிழில் வாசகங்களை எழுத இந்த அரசு செயல்முறையில் நடைமுறைப்படுத்தும் என்று உறுதி கூறுகிறேன். மேலும் சேரன், சோழன் போன்ற போக்குவரத்துக் கழகங்களின் சின்னங் களை மீண்டும் எழுத ஏற்பாடு செய்யப்படும் என்று உறுதி கூறு கிறேன். திருவள்ளுவர் படத்தை மீண்டும் பேருந்துகளில் வைப்பது பற்றியும் அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, பேருந்துகளிலே பொது மக்கள் தங்களுடைய பணத்தைச் செலவழித்துப் பயணம் போகின்ற நேரங்களில் அவர்கள் செல்கின்ற பஸ் எந்த இடத்தி லிருந்து புறப்படுகிறதோ அந்த இடத்தின் பெயரையும் எந்த இடத்திற்குத் திரும்பிப் போய்ச் சேருகிறதோ அந்த இடத்தின் பெயரையும் விளம்பரப்படுத்த பெரிய கொட்டை எழுத்துக்களில் விளம்பரப்படுத்துவதற்குப் பதில் ஒவ்வொரு அரசாங்கம் மாறும் போதும் அந்தந்த அரசாங்கங்களுடைய அடிப்படைக் கொள்கை களை கோஷங்களை வடித்து அவற்றையெல்லாம் முழுவதும் பேருந்துகளில் விளம்பரம் செய்வது சரியா என்பதை அமைச்சர் அவர்கள் யோசிப்பார்களா? இப்படிப்பட்ட விளம்பரங்கள் எழுதப்படுவதால் ஒரு கியூரியாசிடி ஏற்படுகிறது. மக்கள்

1977 ஆகஸ்ட் 8]

பேருந்துகளில் பயணம் செய்யும்போது இவற்றைப் படிக்க முடியாது, ஆனால் பேருந்துகள் நிற்கிறபோது மக்கள் வாசிக்கிறார்கள். இவ்வளவு விளம்பரங்களும் பீக் ஹவர்ஸில் வாசிப்பார்களானால் அதன்மூலம் விபத்து கூட ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே அரசாங்கப் பணத்தைக் கொண்டு இப்படிப்பட்ட விளம்பரத்தை பஸ்களில் செய்யாமல், மக்கள் போய்வரக்கூடிய இடங்களை அந்த இடங்களின் பெயர்களை மட்டும் போட்டு விளம்பரங்களைப் போடுவதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து யோசித்துப் பரிசிலிக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சித் தலைவர் குறிப்பிட்டதுபோல் திருவள்ளுவர் படங்கள் நீக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை மாட்டுவதற்கும், அந்தந்த டிரைவர்களுக்கு விருப்பமான கடவுள் படங்களைப் பேருந்துகளில் மாட்டிக்கொள்கிறார்கள், அந்தப் படங்களை மாட்டக் கூடாது என்று யோசித்து அவைகளை அகற்றுவதற்கு அரசு முடிவெடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் கூறிய யோசனை ஏற்கனவே இந்த அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. வீ. சவுந்திரராஜன் : தலைவர் அவர்களே, 20 அம்சத் திட்டங்கள் ஏழைகளுக்கு நன்மை கொடுக்கும் திட்டங்களா அல்லது பணக்காரர்களுக்கு நன்மை கொடுக்கும் திட்டங்களா ? இந்த 20 அம்சத் திட்டங்களை அன்று ஆதரித்த சிலர் இன்றைக்கு எதிர்க்கிறார்கள் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, முதல் வினா 20 அம்சத் திட்டத்தைப்பற்றிய தல்ல, அரசுப் பேருந்துகளில் 1976 ஜனவரி திங்களுக்குப் பின்னால் 20 அம்சத் திட்டம் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதா என்பதுதான் முதல் கேள்வி. உறுப்பினர் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இந்த 20 அம்சத் திட்ட விளம்பரங்களை ரோடுகளிலே ஊராட்சி ஒன்றியங்களிலே பல்வேறு வார்த்தைகளை வைத்து எழுதினார்கள்,

[1977 ஆகஸ்ட் 8

தற்சமயம் தேர்தல் நடந்த காரணத்தால் எல்லா இடங்களிலேயும் போஸ்ட்டர்களை ஒட்டிவிட்டார்கள், இவைகளை யெல்லாம் சீர்திருத்தம் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நான் முதலிலேயே குறிப்பிட்டபடி முதல் வினா 20 அம்சத் திட்டம் பேருந்துகளில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதா என்பதுதான், உறுப்பினர் இதற்கும் தனிக் கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, 20 அம்சத் திட்ட விளம்பரம் செய்வதற்கு ஏற்கனவே இருந்த அரசு அதற்காக பணத்தைச் செலவுசெய்து அது வேஸ்ட் என்று கருதப்படுகிறது. எனவே இந்த 20 அம்சத் திட்டத்தை விளம்பரப்படுத்த பணம் செலவு செய்ய வேண்டியது அவசியமா என்பதை அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற ஜனதா அரசு தான் 20 அம்சத்திலே 16 அம்சங்களைப் போட்டு விளம்பரப்படுத்த வேண்டுமென்று கோரியுள்ளது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : இந்த 20 அம்சத் திட்டத்தை அமல்படுத்துவதற்குச் சில கமிட்டிகளை அமைத்தார்கள், அதிலே பல்வேறு உறுப்பினர்களைப் போட்டார்கள், அதிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உட்பட பலர் இருக்கிறார்கள். அந்த கமிட்டி காலாவதியாகிவிட்டதா, அல்லது அது உயிர் உள்ள முறையில் நடத்துவதற்கு வேறு நபர்களைச் சேர்த்துக் கொள்ளுவதற்குத் திட்டமிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நான் ஏற்கனவே கூறியதைப்போல் அரசுப் பேருந்துகளில் 20 அம்சத் திட்டம் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதா என்பது தான் மூலக் கேள்வி, ஆகவே இதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, பேருந்துகளை ஓட்டுநர்கள் ஜாக்கிரதையாக, பாதுகாப்பாக, அச்சத்தோடு ஓட்டுவதற்கு ஏற்றமுறையில் அந்தந்த டிரைவர்களின் மனைவி மக்களுடைய படங்களை மாட்டுவதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

1977 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்வதற்கு வாய்ப்பில்லை, காரணம், ஓட்டுநர்கள் அடிக்கடி மாற்றப்படுகிறார்கள், ஆகவே சிக்கல் ஏற்படும். எனவே உறுப்பினர் யோசனையைப் பரிசீலிப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பஸ்களிலே திருவள்ளுவர் படம் வைத்திருப்பதிலே யாருக்கும் ஆட்சேபணை இல்லை. ஆனால் அந்தக் குறள்களை யாரும் மனப்பாடம் செய்வதில்லை, பள்ளிக்கூடங்களிலே எஸ்.எஸ்.எல்.சி.-யிலேயே தவறான விளக்கங்கள் செய்யப்படுகின்றன. ஆகவே அதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா? அதோடு சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட காந்தி, நேரு, ஜீவானந்தம் போன்றவர்களுடைய படங்களை வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : திருவள்ளுவர் படத்தை மட்டுமே பேருந்துகளிலே வைப்பது பற்றி அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறாதது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒத்தி வைப்புத் தீர்மானம்.

சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமுன் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒத்தி வைப்புத் தீர்மானம். "சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் 2—8—1977 முதல் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக முன் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதால் ஏற்பட்டுள்ள நிலைகுறித்து" விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று திரு. க. சுப்பு அவர்கள் ஒரு தீர்மானம் கொடுத்துள்ளார். இது எப்படி அவையின் பிற